# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சியில் மன்ற சாதாரணக் கூட்டம் 12.08.2022 ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 03.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்: 1</u>

**I) கீழக்கரை நகர்மன்ற 19வது வார்டு உறுப்பினர் திரு. ச. சஃப்ரஸ் நவாஸ் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19க்குட்பட்ட பொது மக்கள் கோரிக்கையின் படி சில தெருக்களில் கழிவுநீர் பைப்லைன் அமைத்து தரும் பணி மேற்கொள்ள கோருதல். |
| 2. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19ல் பழைய கஸ்டம்ஸ் ஆபிஸ் அருகில் பூங்கா அமைத்து தர கோருதல். |

**II) கீழக்கரை நகர்மன்ற 20வது வார்டு உறுப்பினர் திரு. அ. சேக் உசைன் அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.. 20ல் பெத்திரி தெருவில், சங்குளிகார சங்கம் அருகில் உள்ள இடத்தில் பூங்கா அமைத்து தர கோருதல். |

**III) கீழக்கரை நகர்மன்ற 5வது வார்டு உறுப்பினர் திருமதி..சி. காயத்ரி அவர்கள் கீழ்காணும் பணிகள் செய்து தருமாறு கோரியுள்ளார்.**

| வ.எண். | பணிகள் விபரம் |
|---|---|
| 1. | கீழக்கரை நகராட்சி அலுவலகம் முன்பு தனியார் கட்சி மற்றும் அமைப்புகள் எவ்வித போராட்டமும் மேற்கொள்ள கூடாது என்பது தொடர்பாக. |

<u>அலுவலக்குறிப்பு</u>

மேற்காணும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

## <u>தீர்மான எண். 84</u>

1) I, II தீர்மானம் நிறைவேற்றப்பட்டது
2) III பரிசீலனைக்கு பிறகு முடிவு எடுக்கப்படும்.

**பொருள்: 2**

கீழக்கரை நகராட்சியில் 04.03.2022-ந்தேதி நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான தொலைபேசி ஏற்பாடு செய்து கொடுக்குமாறு ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்த பழைய தொலைபேசி எண்கள் காலாவதியாகி விட்டதால், தற்போது நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய தொலைபேசி எண்கள் வாங்குவதற்கு, கீழக்கரை BSNL அலுவலகத்திலிருந்து OFC கேபிள் மூலம் இணையவசதியுடன் கூடிய தொலைபேசி அமைத்திட செலவினம் ரூ. 12,000/- ஆகும். மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.267/2022/இ1)

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் விபரப்படியான நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய தொலைபேசி அமைப்பதற்கு, இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் ரூ.12,000/- மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 85**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 3**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய பின்புறம் அமைந்துள்ள ஆடுவதை செய்யும் கூடம் உரிமம் குத்தகை அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்றத்தில் 20.01.2022ந் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது- அதன்பேரில் 19.07.2022-ந்தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரியதில் ஆடுவதை செய்யும் கூடம் குத்தகைக்கு வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலக்கேள்வி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**ஏலக்கேள்வி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு.ஏ. முகம்மது ஹனிப் சுபியான்,<br>18/95, தெற்குத்தெரு, கீழக்கரை | 0 |
| 2. | திரு.நெய்னா முகம்மது பாதுஷா<br>19/333, வடக்குத்தெரு, கீழக்கரை | 2,00,000/- |
| 3. | திரு. ஜெ. அபுபக்கர் சித்திக்,<br>19/234, தெற்குத்தெரு, கீழக்கரை | 1,98,000/- |

| | | |
|---|---|---|
| 4. | திரு.பி.வீமராஜ், த/பெ.பொன்னுசாமி<br>8/461, பசும்பொன் நகர்,இராமநாதபுரம். | 0 |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | திரு. முகம்மது நயிம் அக்தர்,<br>9/19, பரதர் தெரு, கீழக்கரை | 66,000/- |
| 2. | திரு.கா.மனோகரன், த/பெ.காளிமுத்து,<br>7/39, சுப்பு தேவன்,வலசை,இராமநாதபுரம். | 95,000/- |

**(கோப்பு எண்.852/2021/அ2)**

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் விபரப்படியான ஏலக்கேள்வி தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகைகளின் திரு. நெய்னா முகம்மது பாதுஷா, கீழக்கரை என்பவர் அதிகபட்சமாக ஏலக்கேள்வி ரூ.2,00,000/-க்கு கேட்டுள்ளார். எனவே, அதிக பட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. நெய்னா முகம்மது பாதுஷா, கீழக்கரை என்பவருக்கு ஆண்டு குத்தகை உரிமம் தொகையை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 86**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 4**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு பயன்பாட்டில் உள் ள ACER LCD MONITOR Model No. T1 900 HQ கணினி மற்றும் CPU / Foxin Super multi பழுதுகள் ஏற்பட்டுள்ளது எனவும், சொத்துவரி சீராய்வு தொடர்பான பணிகள் முடிவுற்ற நிலையில் 1 முதல் 21 வார்டுகளுக்கான சொத்துவரி மற்றும் காலிமனைவரிக்கான 2022-23 ஆம் ஆண்டு கேட்பு புத்தகம் மற்றும் கேட்பு அறிவிப்பு கணினியில் பதிவிறக்கம் செய்து இவ்வலுவலக வருவாய் உதவியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணி உள்ளதால் மேற்படி கணினி பழுது நீக்கம் செய்து தருமாறு வருவாய் பிரிவு எழுத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கணினி இந்நகராட்சி பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு உரிய விலைப்புள்ளி கோரி உரிய நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நிர்வாக நலன் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று,கீழ்காணும் விவரப்படியான கணினி மற்றும் CPU பழுதுநீக்கம் செய்ய உரிய விலைப்புள்ளி கோரஇந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொருட்கள் விபரம் | வேலையின் விவரம் |
|---|---|---|
| 1. | ACER LCD MONITOR Model No. T1 900 HQ | பழுது நீக்கம் செய்து தருதல் |
| 2. | CPU / Foxin Super multi | |

(கோப்பு எண். 274/2022/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) கணினி மற்றும் CPU பழுது நீக்கம் செய்வதற்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண். 87</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொருள்: 5</u>

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு பயன்பாட்டில் உள் ள ACER LCD MONITOR Model No. T1 900 HQ கணினி மற்றும் CPU / Foxin Super multi பழுதுகள் ஏற்பட்டு பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதால், இந்நகர்மன்ற தலைவரிடம் 19.07.2022 ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டு, கணினி மற்றும் CPU பழுது நீக்கம் செய்வதற்கு 26.07.2022ந் தேதி குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பொருட்கள் விபரம் | எண்ணம் | நிறுவனத்தின் பெயர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ்இராமநாதபுரம், | எஸ்.கே. கம்ப்யூட்டர்ஸ், சேல்ஸ் அன்ட் சர்வீஸ், இராமநாதபுரம் | ஏசியன் இன்போடெக் சேல்ஸ் அன்ட் சர்வீஸ், இராமநாதபுரம் |
| 1 | 19 Inch LED Monitor | 1 | 6300 | 6800 | 6600 |
| 2 | Antivirus | 1 | 950 | 950 | 1050 |
| 3 | System Service | 1 | 1500 | 1800 | 1800 |
| | **Total** | | **8750** | **9550** | **9450** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி, இராமநாதபுரம் ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனம் மூலம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை நிர்வாக நலன் கருதி இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை இந்நகர்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 274/2022/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கணினி மற்றும் CPU பழுது நீக்கம் செய்வதற்கு குறைந்த விலைப்புள்ளி ரூ.8750/- கொடுத்துள்ள இராமநாதபுரம் ஸ்மாக்டெக் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தின்

விலைப்புள்ளியை இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மான எண். 88</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 6</u>**

நமது நாட்டின் 75வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவினை (Azadika Amit Lahotsaw) அனைத்து வீடுகளிலும் 13.08.2022 முதல் 15.08.2022 வரை தேசிய கொடியினை ஏற்றி கொண்டாடும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 1500 எண்ணம் தேசிய கொடியினை மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் அலுவலகத்தில் இருந்து வாங்குவதற்கு செலவினம் ரூ.18000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.293/2022/எச்1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மேற்கண்டுள்ளபணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 89</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொருள்: 7</u>**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி, கீழக்கரை நகர் பகுதிகளில் நெகிழி பயன்பாட்டினை தவிர்த்து மஞ்சப்பை பயன்படுத்துவதை முன்னெடுக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "மஞ்சப்பை பயன்படுத்துவதை முன்னெடுப்போம்" என்ற மல்டி கலர் ஸ்டிக்கர்கள், நோட்டிஸ்களை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் அச்சடித்து வாங்குவதற்கு விலைப்புள்ளிகள் கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 90</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 8**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் உறிஞ்சும் வாகன எண்.TN65Q 9563 வாகனத்தினை FSTP திட்டத்தின் கீழ் பயன்படுத்த உள்ளதால், மேற்படி வாகனத்திற்கு டயர்கள் 06 எண்ணம், டியூப் 06 எண்ணம், டியூப் பவாப் 06 எண்ணம், 20 அடி ஓஸ் மற்றும் நீர் உறிஞ்சு திறன் மோட்டார் 01 எண்ணம் புதியதாக வாங்குவதற்கும், அதற்கான செலவினம் ரூ.4,00,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.293/2022/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்காணும் விவரப்படியான பொருட்கள் வாங்கவும், அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 91**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 9**

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டு அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மூலம் 55 பணியாளர்களை கொண்டு பணிகள் செய்ய இந்நகராட்சியால் வழங்கப்பட்ட உத்திரவின்படி, பணிக்காலம் 02.08.2022 தேதி உடன் முடிவடைவதால் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கோரி M/S.Exsernet. S.M.M. காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளையம், மதுரை 2. நிறுவனத்தின் கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது. மேற்படி, நிறுவனத்திற்கு பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 03.08.2022 முதல் 02.02.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.எச்.1/1528/2018)**

**அலுவலகக்குறிப்பு**

கீழக்கரை நகராட்சி 21 வார்டு பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அனுமதி கோரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 03.08.2022 முதல் 02.02.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 92**

மூன்று மாதம் மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 10

கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.01 முதல் 11 வரை உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு பணிகள் செய்ய இந்நகராட்சியில் வழங்கப்பட்ட உத்திரவின்படி, பணிக்காலம் 11.08.2022-தேதி உடன் முடிவடைவதால் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கோரி M/S.Exsernet. S.M.M. காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளையம், மதுரை 2. நிறுவனத்தின் கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது. மேற்படி, நிறுவனத்திற்கு பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 12.08.2022 முதல் 11.02.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.எச்.1/1528/2018)**

**அலுவலகக்குறிப்பு**

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.01 முதல் 11 வரை உள்ள பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கோரிய கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால், பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி 12.08.2022 முதல் 11.02.2023 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

### தீர்மான எண். 93

மூன்று மாதம் மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பொருள்: 11

இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் ரூ.4.10 இலட்சத்திற்கு 6 எண்ணம் சிறு மின் கோபுர விளக்கு (Minimast) அமைக்கும் பணி மேற்கெள்ளும் பொருட்டு இந்நகர்மன்றத்தில் 10.01.2022ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் , சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 27519-36/2021-பி2, நாள். 30.03.2022ன்படி மேற்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 03.08.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **நமக்கு நாமே திட்டம் 2021-2022** | | | | |
| 1 | Supply, delivery and erection of Minimast (12 Metre) with 6 No.s 150 W LED Fitting in 1 place at sea shore area. | 4.10 | M/s. MRP Corporation 92, திருமகள் தெரு, திருவள்ளுவர் சாலை, பைபாஸ் ரோடு, மதுரை | மதிப்பீட்டு தொகையை விட 0.01% குறைவு |
| | | | M/s. FNA Multi Trade Pvt Ltd 144/1, நுங்கம்பாக்கம் ஹை ரோடு, சென்னை | மதிப்பீட்டு தொகையை விட 0.07% அதிகம் |

**(கோப்பு எண்.623/2021/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. MRP Corporation மதுரை நிறுவனத்திற்கு மேற்காணும் பணிக்கு 05.08.2022ந் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 94**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள்: 12**

இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் ரூ. 8.20 இலட்சத்திற்கு 6 எண்ணம் சிறு மின் கோபுர விளக்கு (Minimast) அமைக்கும் பணி மேற்கெள்ளும் பொருட்டு இந்நகர்மன்றத்தில் 10.01.2022ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் , சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 27519-36/2021-பி2, நாள். 30.03.2022ன்படி மேற்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 03.08.2022ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | திட்டம் / வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **நமக்கு நாமே திட்டம் 2021-2022** | | | | |
| 1 | Supply, delivery and erection of Minimast (12 Metre) with 6 No.s 150 W LED Fitting in 2 places at sea shore area ward no.11 | 8.20 | M/s. MRP Corporation<br>92, திருமகள் தெரு,<br>திருவள்ளுவர் சாலை,<br>பைபாஸ் ரோடு,<br>மதுரை | மதிப்பீட்டு தொகையை விட 0.01% குறைவு |
| | | | M/s. FNA Multi Trade Pvt Ltd<br>144/1, நுங்கம்பாக்கம் ஹை ரோடு, சென்னை | மதிப்பீட்டு தொகையை விட 0.07% அதிகம் |

**(கோப்பு எண்.623/2021/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. MRP Corporation மதுரை நிறுவனத்திற்கு மேற்காணும் பணிக்கு 05.08.2022ந் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதையும், மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 95</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஒப்பம்/— பை. செஹனாஸ் ஆபிதா**
**நகர்மன்ற தலைவர்**
**கீழக்கரை நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**